# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : CC 21/2021**

**Prosecution witness : அ.சா. 10** **Date : 09.02.2024**

| Name : பாலமுருகன் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது. (Accused absent. Petition filed and allowed).

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது மடத்துக்குளம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2017-ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது, கடந்த 04.02,2019 ம் தேதி காலை 10.00 மணிக்கு இவ்வழக்கில் காவல் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் பழனிசாமி அவர்கள் நிலையப்பொறுப்பில் இருந்தபோது, முத்துசாமி மகன் மணியன் நிலையம் ஆஜர் ஆகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப மேச்சேரி காவல் நிலைய குற்றஎண்.59/2019 ச/பி 279, 304(ஏ) இதச பிரிவில் வழக்கு பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும்.**

2) பிறகு காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் பழனிசாமி கடந்த 04.02.2019-ம் தேதியன்று காலை 11.30 மணிக்கு சம்பவயிடம் சந்திரமா காடை பஸ்டாப் அருகே உள்ள வேகத்தடை அருகே ஓமலூர் ரோட்டில் எம்.காலிபட்டி PACB வங்கி அருகே சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் முருகன் மற்றும் செல்லமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்தார். **பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும்.**

3) பிறகு சாட்சிகள் மணியன், பூபதி, முத்துலிங்கம், வினைதீர்த்தான், முத்துகுமார், தினகரன், ராஜேந்திரன், முருகன், செல்லமுத்து, விஜயா, பிரபு ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட ரமேஸ் என்பவர் சேலம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இறந்த பின்னிட்டு அவரது இறப்பினை உறுதி செய்த மருத்துவர் ராஜேந்திரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதியப்பட்டது. பின்னர் மேல் விசாரணைக்காக எனது வசம் ஒப்படைக்கப்பட்டது.

4) பின்னர் பிரேதத்தின் மீது இறப்பின் உன்மை தன்மை அறியும் பொருட்டு பிரேத விசாரணை பஞ்சாயத்தார் முன்னிலையில் செய்யப்பட்டது. **பிரேத விசாரணை அறிக்கை அறிக்கை அ.சா.ஆ.6 ஆகும்.** இறப்பின் உண்மை தன்மை அறிய வேண்டி மருத்துவர் மோகன் அவர்களிடம் தலைமை காவலர் ஆறுமுகம் என்பவர் மூலமாக பிரேதம் அடையாளம் காட்டப்பட்டு கடந்த 04.03.2019-ம் தேதி மாலை 4.00 மணிக்கு பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. **சடலகூறாய்வு அறிக்கை அ.சா.ஆ.7.** ஆகும். பிறகு நல்லடக்கம் செய்வதற்காக உறவினர் வசம் ஒப்படைக்கப்பட்டது.

5) விபத்தில் ஈடுபட்ட TN- 54 B-8407 TVS Starcity இருசக்கர வாகனத்தை கைபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் இயந்திரகோளாறு உள்ளதா என ஆய்வு செய்ய ஆய்வாளர் திரு.ஜெயந்தி வசம் அனுப்பப்பட்டது. இதன் **இயந்திரகோளறு அறிக்கை அ.சா.ஆ.8 ஆகும்.** விபத்தில் ஈடுபட்ட மற்றொரு வாகனமாக TN- 52 X-8890 Ashok Layland Bus இருசக்கர வாகனத்தை கைபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் இயந்திரகோளாறு உள்ளதா என ஆய்வு செய்ய ஆய்வாளர் திரு.ஜெயந்தி வசம் அனுப்பப்பட்டது. இதன் **இயந்திரகோளறு அறிக்கை அ.சா.ஆ.9 ஆகும்.**

6) கடந்த 05.02.2019ம் தேதி காலை 9.15 மணிக்கு மேச்சேரி பஸ் நிலையம் முன்பாக வைத்து கைது செய்யப்பட்டு தக்க நிலையப்பிணையில் விடுவித்தார்.

7) இவ்வழக்கின் சாட்சிகளை விசாரித்த பிறகு, குற்றத்தன்மை உண்மை என தெரியவந்ததால் வழக்கு தன்மைக்கேற்ப சாட்சிகளின் விசாரணைக்கேற்ப புலன் விசாரணையை முடிவு பெற்ற பிறகு எதிரியின் மீது கடந்த 06.04.2019 ம்

தேதி குற்றஎண்.270/2018 ச/பி 279, 304(ஏ) இதச குற்றப்பத்திரிக்கை தாக்கல்செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

**இல்லை.**

**ஓம்/– தே. மயில்சாமி,**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**